434

போதனா விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்

நேச மாதா



C. Venkatachalam S, 1941-43.

434
28 NOV 1946
MAD

Editor ... Lourduswami, B.A., L.T.
Publi... ...ining School, Trichinopoly.

NH6 . 37·3.
2 10005.

... செப்டெம்பர் 1946 மலர் 3

...முறை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா 2.

போதன விஷயப் பூங்கொத்து

கொத்து 37] 15 செப்டெம்பர் 1946 [மலர் 3

பத்திராதிபர் குறிப்புகள்

T. S. L. C. பரீட்சை 1947.—சென்ற T. S. L. C. பரீட்சையிலும், முந்திய வருஷங்களிலும் பரீட்சையில் தவறிப்போன நம் பழைய மாணவர்கள், 1947 மார்ச்சு மாதத்தில் நடைபெறும் T. S. L. C. பரீட்சையில் மறுபடி எழுதவேண்டியவர்களாவர். அவ்விஷயமாய் அடுத்த அக்டோபர்-மீ 15-ம் தேதிக்குள் (15-10-46) பரீட்சைக் கட்டணம் இதனடியில் குறித்துள்ளபடி இப்பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு அனுப்பிவிடவேண்டும். அதோடு எந்த "ஸெண்டரில்" பரீட்சை எழுத விருப்பம் என்பதையும் தெரிவித்துவிடவேண்டும். பரீட்சைக் கட்டண விவரம் பின்வருமாறு:—

ஸெக்கண்டரி கிரேடு ஒரு தனிப்பாடம் (Single Subject) அல்லது ஒரு "தொகுதி" (Single Group) மாத்திரம் எழுதக் கட்டணம் **ரு. 5-0-0.**

ஒரு பாடத்திற்கு மேற்பட்ட பாடங்கள் அல்லது ஒரு "தொகுதிக்கு" (Group) மேற்பட்ட பாடங்கள் எழுதக் கட்டணம் **ரு. 10-0-0.**

எலிமெண்டரி கிரேடு.—மேற்கூறியபடி ஒரு பாடம் (Single Subject) அல்லது ஒரு "தொகுதி" (Single Group) மாத்திரம் எழுதக் கட்டணம் **ரு. 3-0-0.**

ஒரு பாடத்திற்கு மேற்பட்ட பாடங்கள் அல்லது ஒரு "தொகுதிக்கு" (Group) மேற்பட்ட பாடங்கள் எழுதக் கட்டணம் **ரூ. 6-0-0.**

WANTED Secondary and Higher Elementary Trained Teachers for St. Thomas R. C. School, Avanashi.

Apply to:—

Rev. Father A. SOOSAY, Manager,

R. C. School, Avanashi, (Via) Tiruppur,

COIMBATORE DT.

சென்னை கல்வி இலாகா

OFFICE ... 28 NOV 1946 MADRAS

[Fort St. George Gazette Part I-B dated 13-8-'46. Page 364.]

ஹையர் எலிமெண்டரி ஆசிரியர்களும் S.S.L.C. பரீட்சையும் :—

(1) ஹையர் எலிமெண்டரி கிரேடு பயின்ற ஆசிரியர்கள் அப்பரீட்சையில் தேறி, மூன்று வருஷங்களுக்குக் குறையாமல் அங்கீகாரமான பாடசாலைகளில் சேவைசெய்திருந்தால், 1947-ம் வருஷம் தொடங்கி 1950-ம் ஆ முடிய S. S. L. C. பரீட்சையில் Private மாணவர்களாகப் பரீட்சை எழுத அனுமதியுண்டு. (சென்றமாத "பூங்கொத்தில்" விவரம் காண்க.)

[மேலும், பழைய திட்டத்தின்படி (Old Scheme) ஹையர் எலிமெண்டரி T. S. L. C. பரீட்சையில் தேறினவர்கள் "ப்ரைவேட்டாக" S. S. L. C. பரீட்சை, அல்லது மெட்ரிகுலேஷன் பரீட்சை "பாஸ்" செய்திருந்தால், ஐந்து வருஷங்களுக்குக் குறையாமல், அங்கீகாரமான பாடசாலைகளில் சேவையும் புரிந்திருந்தால், ஸெக்கண்டரிகிரேடு, T. S. L. C. பரீட்சையில் Private மாணவர்களாகப் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவார்கள்.]

(2) இப்பரீட்சை (S. S. L. C.) 1947-ம் ஆ மார்ச்சு-மீ 17-ம் தேதி திங்கள்கிழமையிலிருந்து தொடங்கி நடைபெறும்.

(3) ஷை "ப்ரைவேட்" மாணவர்கள் 3 தடவைகள்தான் பரீட்சை எழுதலாம். ஆனால் "ஷெட்யூல்ட்" வகுப்பினர் 4 தடவைகள் எழுத அனுமதியுண்டு.

(4) ஷை பரீட்சை எழுதும் அபேக்ஷகர்கள், தங்கள் T. S. L. C. ஸர்ட்டிபிக்கேட்டையும், ஷை பரீட்சைக்குப் பணம் செலுத்திய கஜானா ரசீதையும் (Treasury Receipt) தங்கள் அப்ளிகேஷனுடன் (Application) தங்கள் "ஜில்லா கல்வி அதிகாரி" (D. E. O.) அவர்களுக்கு 1946-ம் ஆ செப்டெம்பர் மாதம் 25-ம் தேதிக்குள் அனுப்பிவிடவேண்டும். இந்த தேதிக்குப்பிறகு 15 நாட்களுக்குள் ரூ. 1 வீதம் அபராதக் கட்டணமும் சேர்த்து ஷை அப்ளிகேஷன் அனுப்பலாம்.

(5) ஷை பரீட்சைக்குக் கட்டவேண்டிய கட்டணம் ரூ. **15-0-0.**

(6) இத்தகையோர், தற்போது S. S. L. C. பரீட்சை எழுதப் போகும் மாணவர்களுடன், அவர்கள் எழுதுகின்ற **ஸெண்டர்களில்** தாங்கள் வேலைபார்க்கும் இடத்திற்குச் சமீபமாயுள்ள யாதாம் ஒரு ஸெண்டரைத் தெரிந்துகொள்ளலாம்.

(7) ஷை "ப்ரைவேட்" மாணவர்களுக்கு அடுத்த ஸெப்டெம்பர் மாதத்தில் (Hall Ticket) அத்தாட்சிப் பத்திரம் அனுப்பப்படும்.

(8) ஷை பரீட்சைக்கு வேண்டிய "அப்ளிகேஷன் பாரங்களை (Application Forms) அந்தந்த ஜில்லா **கல்வி அதிகாரி** (D. E. O.) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். பெண்கள் விஷயத்தில் "இன்ஸ்பெக்ட்ரெஸ்" (Inspectress of Girls' Schools) அவர்களிடமிருந்து பெண்கள் பெற்றுக்கொள்ளலாம்.

எங்கள் யூனியன் சார்பாக 18—8—46 மாலை 6-30 மணிக்கு கல்வி மந்திரி கனம் T. S. அவினாசிலிங்கம் செட்டியார் M. A , B. L., அவர்கள், டாக்டர் ராஜன் பெண் பாடசாலைக்கு விஜயம் செய்தார். அப்பொழுது ஷை பாடசாலையின் மாணவிகளால் கடவுள் வணக்கம், வரவேற்பு பாட்டுகள், நடனம் இவைகள் நடத்தப்பட்டன. யூனியன் தலைவர் ஆசிரியர்களின் குறைகளடங்கிய தாள் ஒன்றை வாசித்து மந்திரி அவர்களிடம் கொடுத்தார். மந்திரி அவர்கள் ஷை யூனியனைப் பாராட்டி எல்லோருக்கும் ஆசி கூறி தம்மால் இயன்றளவு உதவி செய்வதாகச் சொன்னார். அது சமயம் ஸ்ரீரங்கம் பிரமுகர்களில் பெரும்பாலோர் விஜயம் செய்திருந்தனர். மங்களப் பாட்டுகளுடன் கூட்டம் இனிது கலைந்தது.

S. VARADARAJAN,
President,
Municipal School Teachers' Union,
Srirangam.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
20005
600 008

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

R. C. உயர்தரபாடசாலை & சேக்கண்டரி போதனுமுறை பாடசாலைகளின் நாடகக் கழகம்

நம் பாடசாலைகளில் 1945-ம் ஹு நவம்பர் மீ 24-ம் உ யன்று இப் பாடசாலைகளில் பயிலும் ஆசிரிய மாணவர்கள், மாணவர்கள் இவர்களின் அறிவு வளர்ச்சிக்காக நாடகக் கழகம் ஒன்று திருச்சி கத்தோலிக் சங்கீத கழகத்தின் தலைவராகிய திருவாளர் தனசாமி பிள்ளை, B.A., B.L. அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அத் திறப்பு விழா வைபவத்தில் இக்கழகத்தின் நிரந்தர தலைவர் சங். A. லூர்துசாமி, B.A., L.T. அவர்கள், இந்த நாடக கழகமானது இப் பாடசாலையில் ஸ்தாபிக்கப்படுவதின் நோக்கம், இதனுல் மாணவர்கள், அடையும் பயன்கள் முதலியவைகளைப்பற்றி விளக்கி, இக் கழகத்தின் நிர்வாகஸ்தர்களையும் ஏற்படுத்தினுர்கள். பின்னர் இவ் வைபவத்தைச் சிறப்பிக்க பலவகை ஆடல் பாடல்கள் நடந்தேறியது.

இந்நாடக கழகத்தின் காரியாம்சங்கள் மாதந்தோறும் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றது.

ஆகஸ்டு மாதத்திய கூட்டமானது 1946-ம் ஹு ஆகஸ்டு மீ 8-ம் உ யன்று திருச்சி ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீமான் அப்பர் சுந்தர முதலியார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் சிறு நடிப்புகளும், பாடல்களும் நடந்தன. விசேஷமாக "துரைராஜ்" என்ற மாணவரால், தக்க பக்க வாத்தியங்களுடன் ஓர் இன்னிசை விருந்து நடைபெற்றது.

தலைவரவர்கள் தமது முடிவுரையில் நம் நாடக சபாவின் முன்னேற்றத்தையும், விசேஷமாக கச்சேரி நடத்திய துரைராஜ் என்ற மாணவனை வெகுவாக புகழ்ந்தும் பேசினுர்கள்.

செப்டம்பர் மாதத்திய நிகழ்ச்சியானது இம்மாதம் 5-ம் தேதியன்று திருச்சி ஜில்லா லேபர் ஆபிஸர் ஸ்ரீமான் ஜெயராஜ் B. A., அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் "பேராசை பெருநஷ்டம்" என்ற நாடகமும், "எமலோக வைத்தியர்" என்ற ஒரு தமாஷ் நாடகமும் நடைபெற்றது. இறுதியில் ஆசிரிய மாணவர் ராமமூர்த்தி என்பவரால் ஓர் சங்கீத கச்சேரியும் நடந்தது. அவ்வமயம் சங்கீத ஆசிரியர் தாமஸ்

விக்டர் அவர்கள் வயலினும், ஆசிரிய மாணவர் மாதவராவ் என்பவர் மிருதங்கமும், ராமநாதன் என்பவர் கஞ்சராவும் இனிமையாக வாசித்தனர்.

தலைவரவர்கள் தமது முடிவுரையில் தமது மேர்பார்வையிலுள்ள எப் பாடசாலைகளிலும் இம்மாதிரி வைபவங்கள் நடைபெற்றதில்லை என்றும் கூறி நம் நாடகக் கழகத்தின் மேன்மையைப் புகழ்ந்துரைத்தார். ஒவ்வொரு வைபவத்திலும், ஆசிரிய மாணவர்களும், மாணவர்களும் முக்ய பங்கெடுத்து தங்கள் திறமையைக் காட்ட முன்வருவது மிகவும் போற்றுதற்குரியது, இக் கழகத்தால் இவர்கள் தங்களுடைய பிற்கால வாழ்வில் சிறந்த பயனை அடைவார்கள் என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை. இக் கழகத்தின் அபிவிர்த்திக்காக சங். தலைவரவர்களும், சங்கீத ஆசிரியர் திருவாளர் தாமஸ் விக்டர் அவர்களும், ஓவிய விற்பன்னர் திருவாளர் வெங்கிடாசலம் அவர்களும் எடுத்துக் கொள்ளும் பிரயாசைகள் அளவிடற்பாலதன்று. மேலும் இக்கழகத்தை, மென்மேலும் அபிவிர்த்தி செய்ய உதவி புரியும் இதர ஆசிரியர்களுக்கும், ஆசிரிய மாணவர்களுக்கும், மாணவர்களுக்கும் இக்கழகத்தின் பேரால் எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன். வருங் காலத்திலும் நடைபெற விருக்கும் கழக நடவடிக்கைகளில் யாவரும் பங்கெடுத்து இக்கழகத்தால் அடையும் பயன்களை அடையுமாறு வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருச்சினப்பள்ளி,
7-9-1946.

M. லூயிஸ் செல்வராஜ்,
நாடகக் கழகக் காரியதரிசி.

விடுகதை விடைகள்

[கொத்து 37, மலர் 2 பக்கம் 32-ன் விடுகதைகள்]

விடைகள்.—(1) வெங்காயம். (2) வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு. (3) கட்டில். (4) புளி.

பாடக்குறிப்பு

[V. Subramanian]

பாடம் : பூகோளம். இந்தியாவில் உஷ்ணநிலே. வகுப்பு : V.

உபகரணங்கள் :—1. உஷ்ணமானி ; 2. உஷ்ணமான இடங்களும் குளிர்ச்சியான இடங்களும் குறிக்கப்பட்ட இந்தியா படம்.

பீடிகை :—காலேயில் உஷ்ணம் அதிகமா ? மத்யானம் உஷ்ணம் அதிகமா ? வருஷத்தில் எந்தத் தமிழ் மாதத்தில் உஷ்ணம் அதிகம் ? எந்த மாதத்தில் குளிர் அதிகம் ? என்று பல கேள்விகளேக் கேட்டல்.

புது விஷயம் :—உஷ்ணமானியின் உபயோகமென்ன ? இப்பொழுது உஷ்ணமானியைப்பார்த்து உஷ்ணம் எவ்வளவு இருக்கிறதென்று தெரிந்து கொள்ளுங்கள். இம்மாதிரியே இந்தியாவில் பல இடங்களில் காலேயில் உஷ்ணமானியைப் பார்த்து உஷ்ணத்தைக் குறித்திருக்கிறார்கள். கீழே கொடுக்கப்பட்டிருக்கும் இடங்களில் உஷ்ணத்தைக் கவனியுங்கள்.

ஜூலே மாதம்

1.	மதராஸ்	87°	அட்சரேகை	13°	வடக்கு
2.	பம்பாய்	81°	,,	19°	,,
3.	கல்கத்தா	79°	,,	22°	,,
4.	லாகூர்	90°	,,	32°	,,
5.	உதகமண்டலம்	57°	,,	11°	,,

முறை :—மேலே குறித்திருக்கும் ஊர்களே இந்தியாப் படத்தில் பார்த்தல். அவை இருக்குமிடங்களேக் கவனித்தல். அட்சரேகையிலிருந்து பூமத்யரேகைக்குச் சமீபத்திலுள்ள இடங்களேக் கவனியுங்கள். பூமத்ய ரேகையிலிருந்து செல்லச்செல்ல உஷ்ணம் குறைகிறதா அதிகரிக்கிறதா என்று கண்டுபிடியுங்கள்.

விஷயம் :—1, 2, 3 கடற்கரையிலுள்ள பட்டினங்கள், 4. உள்நாட்டுப் பட்டினம்.

முறை :—கடற்கரையிலுள்ள இடங்களில் உஷ்ணம் அதிகமா ? உள்நாட்டிலுள்ள இடங்களில் உஷ்ணம் அதிகமா ? உதகமண்டலத்தில் உஷ்ணம் குறைவு ஏன் ? (உயரமான பிரதேசம்.)

முறை :—மேலே கொடுத்திருக்கும் குறிப்புகளிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்ன? (வருவித்தல் : 1. அட்சரேகை அதிகமானல் உஷ்ணம் குறைவு. 2. கடற்கரைப் பிரதேசத்தில் உள்நாட்டுப் பிரதேசத்தைவிட உஷ்ணம் குறைவு. 3. உயர்ந்த பிரதேசத்தில் உஷ்ணம் குறைவு. இந்தியாப் படத்திலிருந்து உஷ்ணம் அதிகமான பிரதேசத்தையும் குறைவான பிரதேசத்தையும் கண்டுபிடித்தல்.

கேள்விகள் :—(1) நமது வசிப்பிடத்திற்குக் கிழக்கே என்ன கடல் இருக்கிறது? (2) நமது ராஜதானியில், வெயிற்காலங்களில் குளிர்ச்சிக்காகச் செல்லக்கூடிய இடங்கள் எவை? 3. இந்தியாவின் துறைமுகப் பட்டினங்கள் பெயர் கூறு. (4) பூமத்யரேகைக்குப் பக்கத்தில் சென்றல் சீதோஷ்ண நிலை எப்படி இருக்கும்? (5) சீதோஷ்ணம் குறைவாயுள்ள இடம் எங்கே அமைந்திருக்கும்? (மலைமேல், பூமத்யரேகைக்கு தூரத்தில்)

அப்யாசங்கள் :—சீதோஷ்ண நிலையையும், அட்சரேகையும்கொண்டு படத்தைப்பார்த்தும் இடத்தைக்கூறு.

(1) 87° உஷ்ணம் அட்ச. 13° வடக்கு. (2) 60° உஷ்ணம் அட்ச. 32°.

கரும்பலகைச் சுருக்கம்

(1) நமது வசிப்பிடத்திற்குக் கிழக்கே வங்காளக்குடாக்கடல் இருக்கிறது.

(2) குளிர்ச்சிக்காக, வெயிற்காலத்தில் நமது ராஜதானியில் கொடைக்கானலுக்கும், உதகமண்டலத்திற்கும் செல்கிறார்கள்.

(3) பூமத்யரேகை பக்கத்தில் உஷ்ணம் அதிகம்.

(4) அட்சரேகை அதிகமானல் உஷ்ணம் குறைவு.

(5) கடற்கரைப் பிரதேசம் உள்நாட்டுப் பிரதேசத்தைவிட உஷ்ணம் குறைவு.

(6) உயர்ந்த பிரதேசத்தில் உஷ்ணம் குறைவு.

OFFICE OF THE RE
28 NOV 1949

ஏற்றக்காரன் காதல்

["தாதை கண்ணன்"]

நான் அடிமையாகிவிட்டேன்! எதற்கு? இயற்கை எழிலுக்கு எல்லையே இல்லையென்று காவியங்களில் வர்ணிக்கிறார்களே கலைஞர், அந்த இணையற்ற அழகுக்குத் தான் அடிமையானேன். புள்ளினங்கள் தத்தம் இருக்கை விட்டெழுந்து சிறகுகளைப் 'பட பட' வென்று அடித்துக் கொண்டு செல்கின்றன......இத்தகைய இன்பத்தில், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அந்த மனோகரமான அழகில், நான் என்னையே மறந்தேன்! கால்கள் நடந்தன; கைகள் வீசின; என்னையும் அறியாமல் நடந்தேன். காவிரியின் தெள்ளிய தீம்புனல் பரந்து பல்வளங் கொழிக்கும் 'சோழன் சீமையில்' போய்க்கொண்டிருந்தேன். என் மனமோ பசுமையார்ந்த வள்ளிக்கிழங்கு தோட்டத்தையும் தாண்டிச் சென்றது.

வழியே குறுக்கிட்டது ஒரு சிற்றோடை. முழங்காலளவு நீரினும் அரை அடி குறைவாக, இயற்கை யன்னையின் இதயத்துடிப்பு போன்று 'சல சல' வென்று ஓடிக்கொண்டிருந்தது. நான் இருந்த இடத்திலிருந்து சிறிது தூரத்தில், மந்தமாகத் தவழ்ந்து செல்லுங் காற்றில் மிதந்து வந்துகொண்டிருக்கின்றன சில வார்த்தைகள். தாளம், இராகம் என்னவோ?

வேலமரப் பாதையிலே—வேலையா
வேலையிலே கண்ணிருக்கு—சுப்பையா
வேலி ஓரம் போகுதுபார்—வேலையா.

திடுக்கிட்டேன்; என்? நானும் அருவியைக் கடந்து வேலி யோரம் தான் சென்றேன். பாட்டு மட்டும் கேட்கிறது. ஆனால் ஆளைக் காணோம்! அசரீரியோ?

ஆங்!......தெரிந்துகொண்டேன்; ஒருவன் ஏற்றத்தில் ஓடுகிறான்: மற்றவன் நீர் இறைக்கிறான். அவர்கள் பாடிய பாடல்தான். "சரி, உட்கார்." நானே உட்கார்ந்தேன்.

"வேலையிலே கண்ணிருக்கு—சுப்பையா" ஆம்! பழகப் பழக பாலும் புளிக்கும்—தப்பு—இனிக்கும்! எது? ஓடையின் அழகு—பளிங்கெனத் தெளிந்து விளங்கும் நீரின் மீது உதய சூரியனின் சுவர்ண மயமான ஒளி வெள்ளம் பரவி, இளம் மங்கையரின் தங்க அணிகளில் வீசும் பிரகாசத்துடன் போட்டியிட்டுக் கொண்டிருப்பது போல் தோன்றுங் காட்சி! அருணோதயத்தால் மலர்ந்த கமல மலரின் அழகு. இன்னும் எத்துணையோ! இயற்கை இன்பத்தை யனுபவிக்கும் அவனுக்கு—வேலையனுக்கு—சலிப்பேற்படவில்லை. அதனால்தான் அவன் அதை 'வேலையிலே...' என்றான் போலும். சரி! என்ன போகுது! கண்டேன்! கண்டே பிடித்துவிட்டேன்!! எதை? யாரை? அவளைத்தான்!!! அவளுக்கும் இவனுக்கும் என்ன? அதுவா?......அதுதான்!

பாடல் இன்னும் தொடர்ந்து கொண்டு போகிறது.

வேட்டி துணி போட்டிருக்கோ—சுப்பையா
சித்தாடை கட்டீருக்கு—வேலையா
சின்ன குட்டி போலிருக்கு—சுப்பையா
கண்ணாடி தோற்குமடா—வேலையா
கண்ணைப் பறிக்குதோடா—சுப்பையா

ஓகோ! நாட்டுப்புறத்தானுக்கும் இவ்வளவு தெரியுமா? நகரத்தானுக்கும் இவ்வளவு தொகை மிகைப்படுத்திக் கூற முகிற்கூந்தல், மதியைப் பழிக்கும் வதனம், மாங்கனியின் கதுப்புகள் போன்ற கன்னங்கள், கயற்கண்கள், மலர் இதழ்கள், துடியிடை, அன்ன நடை,—இன்னும் என்னென்னவோ கூறுகிறானே! அவற்றை யெல்லாம் அவன் விட்டு விட்டான். ஆனால் வெகு சுருக்கமாக, கண்ணாடியும் தோற்குதாம், கண்ணையும் பறிக்குதாம்! என்ன கற்பனை! என்ன அழகு! சுருங்கக்கூறி விளங்க வைக்கும் பண்பு இவனுக்குத் தெரியும் போலும்!!! பிறகு

கொண்டையிலே பூவிருக்கு—வேலையா
கொளச்சு முடி போட்டிருக்கா—சுப்பையா

கொண்டையிலும் பூ இருக்கிறதாம். அவளுடைய அடர்ந்த கருநிற கூந்தலையும் வர்ணிக்கிறான். வாரி சொருகிய கூந்தலிலும் ஓர் தனியழகு. அதை நானே பார்த்தேன்! உண்மையிலும் உண்மை!!! இன்னும் பாருங்கள்!

காத்தென பறந்துவாரா—வேலையா
கஞ்சி கொண்டு வாராளடா—சுப்பையா
கதிரருவாள் இருக்குதடா—வேலையா
கதிரருக்கும் காலமல்ல—சுப்பையா
ஆட்டுத் தழை அறுப்பாளடா—வேலையா
அண்டையிலே வந்துட்டாளா—சுப்பையா

இன்னும் எத்தனை வர்ணனை! வருகிற வேகத்தையும், நிலையையும் உள்ள படியே கூட்டல் கழித்தலின்றிச் சொல்லி விடுகிறான். அவள் வருகிற வேகமும் கொண்டு வருகிற அரிவாளும் எனக்கும் சந்தேகம்! கதிரறுக்கவோ? இல்லை. ஆட்டுக்குத் தழை அறுக்கவோ? என்னுள் எழுந்த சந்தேகமும் அவளுக்கும்...... வேலையனுக்கும் கிளம்புகிறதே! அட, என்ன நான் நினைத்தேன்; அவன் பாடியே விட்டான்!

அன்னம் போலே முன்னே வாரா—வேலையா
அவள் என் அத்தை மகள் ரத்தினமடா—சுப்பையா
அவள் உரிமை உள்ள புருஷன் நீ—வேலையா
அடுத்த மாதம் பரிசம் வைப்பேன்—சுப்பையா.

என்ன! நடையையும் வர்ணிக்கிறானே! இவ்வளவு வர்ணனைகளும் பற்றாது போலும்! அன்னத்தின் நடையை தன் ரத்தினத்துடைய—அவளுடைய நடைக்கு ஒப்பிடுகிறான். அதோடு உறவும் இருக்கிறதாம்! உரிமையும்

இருக்கிறதாம்!! உரிமை உள்ளவன் அவன்—நீரிறைக்கும் வேலையன்—ஏற்றத்தில் ஓடுகிறவன் சுப்பையன். அவனுடைய நாடோடிப் பாடலை ரஸித்துக்கொண்டிருப்பவன் நான்! ஏற்றக்காரனும் காதல் புரிகிருன்! அவனுடைய காதல்—தூய்மையான காதல்!!

இதுபோழ்து நான் எடுத்துக் காட்டியுள்ள அடிகளை எல்லாம் கோர்வையாகப் படியுங்கள். எத்துணை சந்தமும், அர்த்த புஷ்டியும் நிறைந்துள்ள பாடல்! அடிகளில் எதுகை மோனைகள்! யாப்பிலக்கணமும் இவனுக்குத் தெரியும் போலும்!!

இத்தகைமையான ‘ நாடோடிப் பாடல்களைப் படிப்பின் எத்துணை இன்பம் பொங்கி வழிகிறது!

சரித்திரத்தில் கால உணர்ச்சி

[Sri N. R. Nanjundeswaran, Headmaster,
R. C. Higher Elementary School, Karumuthampattai.]

1. சரித்திரமும் அதன் நோக்கமும்.
2. கால உணர்ச்சி என்பது யாது?
3. கால உணர்ச்சியின் 3 அம்சங்கள்.
4. கால உணர்ச்சியை ஏற்படுத்த வழிகள்.
5. தேதிகளும் அவற்றுடன் சம்பந்தமும்.
6. தற்காலத்துடன் ஒப்பிடுதல்.
7. முடிவுரை.

OFFICE ... 28 NOV 1948 MADRAS

1. நெப்போலியன் என்பவர் சரித்திரத்தை, எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கட்டுக்கதை எனக் கூறினர். அவ்வண்ணமே சிலர் சரித்திரத்தைக் கட்டுக்கதைகளாக கருதுகின்றனர். “It is but a fable agreed upon.” இது தவறு. மனிதர்கள் வாழ்க்கையை நடத்தி எப்படி நாகரீகத்தில் படிப்படியாய் காலக்கிரமத்தில் முன்னேறினர்கள் என்ற வரலாற்றைக் குறிக்கும் நூலே சரித்திரமாகும். சரித்திரம் ஆராய்ச்சி மூலம் எழுதப்பட்ட நூல் சாட்சியங்கள் மூலாதாரப் பொருள்கள், சாஸனங்கள், பட்டயங்கள் முதலியவற்ருல் உண்மை என்று இன்னும் நிரூபித்து காட்டமுடியும். முற்காலங்களில் நடந்த சம்பவங்களை காலக்கிரம வரிசையில் அழகுடன் கூறப்பட்ட உண்மைகள் இதில் உள்ளன. ஆகவே சரித்திரம் ஒரு கலையும் ஆகும்.

நாம் பாடசாலையில் சரித்திர பாடத்தைப் போதிக்க பல நோக்கங்கள் உண்டு. தேச பக்தியை வளர்த்தல்—சமூக வாழ்க்கையைப் பற்றிய அடிப்படையான அறிவை உண்டுபண்ணவும்—ஞாபக சக்தியை

வளர்க்கவும் — தற்கால பிரச்சனைகளைக் கண்டறியவும்-கால உணர்ச்சியை ஏற்படுத்தவும் சரித்திரம் போதிக்கின்றோம். கால உணர்ச்சி ஏற்படாவிடில் சரித்திரம் போதிப்பதின் பலனை நாம் அடையவில்லை என்னலாம். ஆகவே கால உணர்ச்சி இத்துணை அவசியமாயிருக்கின்றபடியால் அதனைச் சற்று ஆராய்வோம்.

2. கால உணர்ச்சி என்பது யாது :—

சமூக வாழ்க்கையானது பல மாறுதல்களை அடைந்தே தற்கால நிலைமைக்கு வந்துள்ளது. ஒரு சம்பவத்தின் காரணமே இன்னொரு சம்பவமாகும். மேலும் ஒரு சம்பவம் நடந்த காலம் அல்லது ஒரு சரித்திரப் பிரமுகர்கள் வாழ்ந்த காலம் இவற்றைப்பற்றிய அறிவு இருந்தால்தான் அச்சம்பவத்தைப் பற்றி அல்லது அப்பிரமுகணம் பற்றிச் சரியான முடிவுக்கு வரமுடியும். திடீரென்று முடிவுக்கு வராமல் அச்சம்பவம் நிகழ்ந்த காலத்தில் மக்களின் வாழ்க்கை, நாகரீகம் முதலியவற்றைக் கொண்டு தான் அதைப் பாராட்ட முடியும். தற்காலத்தவருக்குள்ள வசதிகளும் சாதனங்களும் முற்காலத்தவருக்கில்லை. ஒரு நிகழ்ச்சி தற்காலத்திலிருந்து எவ்வளவு காலத்திற்கு முற்பட்டது. அக்காலத்தின் நாகரீக நிலை யென்ன என்பதைத் தெரிதலவசியம். இவையெல்லாம் மனதில் கொண்டு சரியாய் பரிசீலனை செய்து தீர்மானிக்கும் மனப்பான்மையையே கால உணர்ச்சி என்கிறோம்

3. இந்த கால உணர்ச்சி 3 அம்சங்களைக் கொண்டது : இம் மூன்றினும் தொடர்பு படுத்தித்தான் அறியப்படும். சரித்திர நிகழ்ச்சி வியாபித்திருந்த கால அளவு தெரியவேண்டும். எவ்வளவு காலம் ஒரு அரசர் அரசாண்டார். அல்லது ஒரு சம்பவம் நடந்தது என்பதைக் கால வரையறை என்கின்றோம். இதைத்தான் (Duration) என்பர். ஒரு சம்பவம் நடந்தது தற்காலத்திற்கு எவ்வளவு தூரத்திற்கு முன் என்றும் தெரிதல் வேண்டும். நமது காலத்திற்கு எவ்வளவு காலத்திற்கு முன் இந்த நிகழ்ச்சி நடந்தது என்பது. இதனை (Distance) என்பர். மூன்றாவதாக நிகழ்ச்சி நடந்த காலம் எது வென்றும் அறிதல் வேண்டும். இன்ன வருடத்தில் இந்த சமுதாயம் இன்ன நிலையிலிருந்ததென்பதை (Location) என்பார்கள். ஆகையால் இம்மூன்று அம்சங்களை ஒட்டியே கால உணர்ச்சி ஏற்படுதல் கூடும். யாதொரு சம்பவம் நடக்கக் காரணம் வேண்டும். பிரமுகர்கள் தோன்றுவதும் நிகழ்ச்சிகள் நடப்பதும் ஒரு காரணத்தோடேயே. ஆகையால் சம்பவம் நடந்ததைத் தேதியால் குறிப்பிடும் போது அத்தேதி அதனோடு சம்பந்தமான நிகழ்ச்சிகளை நமக்கு எண்பிக்கின்றது :— (உ-ம்) 1885 என்றவுடன் தேசீய காங்கிரஸ் ஆரம்பமானதும் அக்காலத்தில் இந்தியாவின் சமூக நிலையும் நாம் கோர்வையாக ஞாபகத்துக்கு வருவிக்கின்றோம். (தொடரும்.)

கணிதப்பகுதி

M. Kulandaisamy H. M. Palayam

பெருக்கல் போதிக்குமுறை

பெருக்கல் கணக்கை கற்பிக்கப் பலவிதமுறைகளை நாம் கையாட வேண்டும். படிப்படியாக ஆரம்பம் முதல் முடிவுவரை கற்பிக்கவேண்டும்.

முதல் படி :—கூட்டலின் சுருக்கம் பெருக்கல் என்பதை நம் போதனையிலிருந்தே மாணவர்கள் அறிந்துகொள்ளவேண்டும்.

(உ-ம்.) $5+5+5+5=20$. என்பதற்கு சுறுக்குமுறை $5\times4=20$. இதை ஒன்றின் கீழ் ஒன்ருக எழுதி கணக்கு செய்யச் செய்து இதன் மூலமாக விதியை வரவழைத்தல் (Inductive Method).

2-ம் படி கிரமமான பெருக்கல் செய்ய பெருக்கல் வாய்ப்பாடு அத்தியாவசியம் என்பதை மாணவர்கள் அறியவேண்டும். பெருக்கல் வாய்ப்பாட்டில் அதிகமான அளவுக்கு பயிற்சி அளிக்கவேண்டும். இதற்கு அஸ்திவாரமாக மூலாதார பெருக்கல் சேர்க்கை (100)-களையும் போதித்து உபயோகிக்க தெரியவேண்டும்.

வாய்ப்பாடு கற்பிக்கும்போது அனுசரிக்கவேண்டியவை :—

(1) பெருக்கல் வாய்பாடு கட்டுதல் (உபகரணங்கள் மூலம் கற்பிக்கவும்)
(2) ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியாக கற்றல்.
(3) வாய்ப்பாட்டை கணக்குகளில் உபயோகித்தல்.
(4) மனப்பாடம் செய்தல்.

சரியான பெருக்கல் அறிவு ஏற்பட பின்வரும் முறையை அனுசரிக்க வேண்டும் :—

1. ஒரு ஸ்தான எண்ணுல் பெருக்கல்

ப. ஒ.	ப.	ஒ.
3 2 ×	3	2
× 8	8	8
1 6	24	16
2 4		
2 5 6		

இதை விளக்கவும்

2. 2 ஸ்தான பெருக்கல்

456 ×	456 × 24
24	
1824	456 × 20 = 9120
912	
10944	456 × 4 = 1824

விடை 456 = 24 = 10944

தமிழ்நாடு ... காப்பக நூலகம்
210005
சென்னை-600 008
JL
NMPP
N46:32:3

தனிபெருக்கு தொகைகளைப் பெருக்கும் ஸ்தான எண்ணின் கீழ் எழுதவேண்டும் என்பதைப் பிள்ளைகளுக்குப் பல உதாரணங்களால் அறிவிக்ககவும்

3. சில சுருக்கு முறைகள் :—

10, 100, 20, 30, 40 முதலிய எண்களால் பெருக்கல்

உ-ம். 25 × 10, 100, 1000 விதி. ஒரு எண்ணை 10, 100, 1000 முதலிய எண்களால் பெருக்க அந்த எண்ணின் வலப்பக்கத்தில் முறையே 250, 2500, 25000. பெருக்கும் எண்ணிலுள்ள 0-க்கு தக்க படி 1, 2, 3 முதலான 0-களை சேர்க்கவேண்டும்.

38 × 20, 200, 2000, (2-ஆல் பெருக்கி முறையே 0 சேர்க்கவேண்டும்.

379 × 729	379 × 729
3411	3411—379 × 9
758	
2653	27288—379 × 9 × 8
276291	276291—379 × 720 + 9

தொடரும்

பெற்றோர் சங்கம்

சிவகெங்கை R. C. ஆரம்ப ஆண் பாடசாலையின் 5-வது ஆண்டு விழா 2-8-46 மாலை 7-மணிக்கு கனம் டாக்டர் S. V. ஜோசப் M.B.,B.S., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. S. குப்புசாமி ஐயர் B.A., L.T., அவர்களும், சோடா பாக்டரி I. S. ஆதம் சாயபு அவர்களும் சொற்பொழி வாற்றினார்கள். இடையிடையை மாணவர்களின் ஆடல் பாடல்கள் நடந்தேறின. மானேஜர் சங். S. Burns S. J. அவர்களால் மாணவர்களுக்கு பரிசுகளும், வியாசப் போட்டியில் ஜெயித்த M. அந்தோனிசாமி என்ற 4-வது வகுப்பு மாணவனுக்கு கனம் I. S. ஆதம் சாயபு அவர்களால் வெள்ளி மெடலும் விநியோகிக்கப்பட்டன. பிறகு மாணவர்களால் "புருஷோத்தமன் அல்லது பொது நலத் தியாகி" என்ற நாடகம் வெகு சிறப்பாக நடித்துக்காட்டப்பட்டது. இறுதியாக வந்திருந்த மாபெரும் கூட்டத்தினர் அனைவருக்கும் தலைமை ஆசிரியர் S. விசுவாசம் பிள்ளையால் வந்தனம் கூறப்பட்டு கொண்டாட்டம் இனிதே முடிவெய்தியது.

S. VISUVASAM PILLAI,

Headmaster.

விளையாட்டுகள்

[M. A. Amirthanathan]

முந்திய இதழில் கூறிய முறையை அனுசரித்து, உபகரணமின்றி, ஆடக்கூடிய விளையாட்டுகளில் சிலவற்றை இனி கவனிப்போம் :—

1. உன் தோழனைக் கண்டுபிடி : வகுப்பில் உள்ள பிள்ளைகளை ஜோடி ஜோடியாக இரட்டை வட்டத்தில் நிறுத்தவும். ஒவ்வொரு ஜோடியும், ஒருவர்க்கொருவர் நண்பராவார்கள். ஆட்டம் தொடங்குமுன் எல்லோரும் உட்பக்கம் திரும்பி நிற்கவேண்டும்.

ஆடும் முறை : போ என்ற உத்திரவு பிறந்தவுடன் உள்வட்டத்தில் உள்ளவர்கள் இடதுபுரம் திரும்பியும், வெளிவட்டத்தில் உள்ளவர்கள் வலதுபுரம் திரும்பியும் ஓடவேண்டும். ஓடும் (About turn) பொழுது எதிர்ப்பக்கம் திரும்பச் சொன்னால் திரும்பியும், நொண்டச்சொன்னால் நொண்டியும் (Hop) குதிரை ஓட்டம் (Horse gallop) ஓடச்சொன்னால், அதுவும் செய்யவேண்டும். இறுதியில் உபாத்தியாயர் ஆட்டத்தின் முடிவை குழல் ஊதி தெரிவித்தவுடன், நண்பர்கள் ஓடி தங்கள் கைகளைக் கோர்த்துக்கொண்டு, வட்டத்தின் மையத்தை அடைந்து உட்காரவேண்டும். எந்த ஜதை கடைசியாய் உட்காருமோ, அதன்மீது குற்றமாகும். இதே போல் மீண்டும், மீண்டும் விளையாட்டு வட்டத்திலிருந்து தொடங்கப்படும். இவ்வாறு ஆடும்கால் எந்த ஜோடியின்மீது 3 குற்றங்கள் ஏற்படுமோ, அந்த ஜோடி தண்டனைக்குப் பாத்தியப்படுவார்கள்.

தண்டிக்கும் விதம் : மற்ற குழந்தைகளை இரண்டு வரிசையில் எதிர் எதிராக சுமார் 6 அல்லது 7 அடி தூரத்தில் நிறுத்தி, தண்டிக்கவேண்டியவர்களை, கைகளைக் கட்டியவண்ணம் ஒருகோடியிலிருந்து, மறுகோடிவரை ஓடும்படி செய்யவும். ஓடும்பொழுது, வரிசையில் உள்ளவர்கள் ஓடுபவர்களை இடுப்பிற்குக்கீழ், பின்பாகத்தில் அடிக்கலாம்.

குறிப்பு : 1. அடிப்பவர்கள் இடுப்பிற்கு மேலாவது, அல்லது முன் பக்கத்திலாவது அடித்தால், அவர்களும் தண்டிக்கப்படவேண்டும்.

2. ஒவ்வொரு ஆட்டத்திலும், ஓடாமல், சிலசமயம் நொண்டியும், குதிரை ஓட்டம் ஓடியும், ராக்ஷச நடை நடந்தும், குதித்தும், தாவியும்...... செல்லுதல் உசிதம்.

2. கைதியை விடுவித்தல் : (Releasing the Prisoner) வகுப்பில் உள்ள பிள்ளைகளை இரு சம கக்ஷிகளாய்ப் பிரித்து, ஒரு கக்ஷியை ஓர் வட்டத்திற்குள்ளும், மற்றொன்றை வெளியிலும் நிறுத்தவும். வெளியில் உள்ள கக்ஷியைச் சேர்ந்த ஒருவனைக் கைதியாகப் பாவித்து அவனை வட்டத்தினுள் இருக்கும் சிறிய வட்டத்தில் நிறுத்தவேண்டும். கைதியின் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள், சடுகுடு, குடு, குடு... .....என்று பாடிக்கொண்டே, உள்ளிருப்போரைத் தொடவேதோடு கைதி தப்பி வெளியிலோட உதவுவான்.

ஒழுங்குகள் :—

1. வெளியில் இருப்போர் ஒவ்வொருவரும் ஒரேதடவைமாத்திரம் எல்லேவழியாய்ப் பாடிச்செல்லலாம். அக்கக்ஷியில் உள்ள **எல்லோரும் பாடியபின்னரே** கக்ஷிகள் இடம் மாற்றிக்கொள்ளவேண்டும்.

2. பாடிச்செல்வோன் (Raider) எத்தனைபேர்களையும் தொடலாம். **மூச்சுடன் திரும்பினுல்** தொடப்பட்டோர் எல்லாம் (Out) பட்டவர்கள் ஆவார்கள்.

3. பாடி வருவோனை (Raider-ஐ) மற்றையோர் பிடிக்கக்கூடாது. அவர்கள் குறிப்பிட்ட வட்டத்திற்குள் ஓடித் தப்பிக்கொள்ளவேண்டும்.

4. தப்ப முயலுங்கால், வட்டத்தின் வெளியில் சென்றாலும், பாடுவோனுல் தொடப்பெற்றாலும், உள்ளிருப்போர் (Out) பட்டுப் போவார்கள். அவர்கள் உடனே வெளியேறிக்கொள்ளவேண்டும்.

5. கைதியானவன் தக்க சமயம் பார்த்து, எல்லேவழியாய், எதிரிகளால் தொடப்பெருமல், வெளிச்செல்லவேண்டும். அவ்வாறு அவன் செல்லும் ஒவ்வொரு தடவைக்கும் 5 மார்க்குகள்வீதம் கொடுக்கவேண்டும்.

6. ஒரு கக்ஷி முழுவதும் பட்டுவிட்டால், எதிர்கக்ஷிக்கு, பட்டுப் போன அத்தனைபேருக்கும் அத்தனை மார்க்குகளும், பிரத்தியேகமாக இரண்டு மார்க்குகளும் கிடைக்கும். நிற்க முன் சொன்னபடி கைதி தப்பிச் செல்லும் ஒவ்வொரு தடவைக்கும் 5 மார்க்குகள் வீதமும், கணக்கிடவேண்டும்.

7. ஒரு கக்ஷியிலுள்ள எல்லோரும் பாடியபின், இடம் மாற்றி, முன்போல் ஆட்டத்தைத் தொடங்கி, மார்க்குகளைக் கணக்கிட்டு, எக்கக்ஷி அதிக மார்க்குகள் வாங்குகின்றதோ, அது ஜெயமுற்றதாகக் கருதப்படவேண்டும்.

குறிப்பு :—1. ஆட்டம் தொடங்குமுன், ஒவ்வொரு கக்ஷிகளும் எத்தனை தடவை படையெடுப்பது (Raid) என்பதை நிட்சயித்துக்கொள்ளவேண்டும்.

2. மார்க்குகளை இரு கக்ஷிகளுக்கும் கணித்து அப்போதைக்கப் போது வெளிப்படுத்தவேண்டும்.

3. ஒரு கக்ஷியில் உள்ள எல்லோரும் படையெடுக்குமுன், கைதி பல சமயம் தப்பிக்கவும், மற்றைய கக்ஷியார் முழுவதும் பல சமயங்களில் பாடவும் கூடும்.

4. குழந்தைகளில் வயதிற்குத் தக்காப்போல், வட்டத்தைப் பெரிதாகவோ, சிறிதாகவோ அமைத்தல் அவசியம்.

(தொடரும்.)

சாரணர் இயக்கத்திற்கான பிரசாரப்பாட்டு!

(கே. வி. சுப்பராவ், ஆசிரியர், காட்டுக்கோட்டை, ஆத்தூர் Tk.)

இராகம்: உதயரவிசந்த்ரிகா — தாளம்: ஆதி.
ஆ: ஸகமபநிஸ். — அ: ஸ்நிபகஸ
("எந்த நேர்ச்சினு, எந்த சூசினு," என்ற தியாகராஜ கீர்த்தனைமெட்டு!)

பல்லவி

சிறுவர்களே! சிறுமிகளே!
சிறந்த சாரணர் இயக்கம் சேர்வீரே! (சிறு)

அனுபல்லவி

(நாம்) எடுத்த ஜன்மம்—ஈடேறவே
ஏழைகட்கும் துன்—புற்றவர்க்கும் உதவ! (சிறு)

சரணம்

1. இந்துஸ்தான சாரணர்—இயக்கம்
இணையில்லாத சாத்—வீக முழக்கம்
இங்கிதமாய் சேர்ந்துழைக்கப் பழக்கம்
இன்பமாய் கொள்ளலாகும் நல்லொழுக்கம்! (சிறு)

2. நீர்வளம் நிலவளம்—கொண்ட நாடு!
நீங்காத கலைகள்—நிறைந்த தாய்நாடு!—நம்
நாட்டின் நலத்திற்கான நன்மைகள் புரிவோம்
நாள்தோறும் உழைத்து நல்ல பலனடைவோம்! (சிறு)

3. 'சேவை' ஒன்றே சிறந்த—தேவையாமிதற்கு
சீலமும் ஞானமும் சிறுவர்க்கே சேரும்
சுத்தமாய் நித்தமும் சோம்பலுமில்லாமல்
சுறுசுறுப்புடனே சுகமும் பெறலாம்! (சிறு)

4. மாலைப்பொழுதினிலே—சோலை தன்னில் கூடி
பாலர் பாலிகைகள்—ஓடி யாடிப் பாடி,
தேகம் திடம் பெற்று தியாகபுத்தி கற்று நம்
தேச மக்களுக்கு தீரமாயுழைப்போம்! (சிறு)

5. கருணை மிகுந்த—மனம் கொண்டு நம்மில்
இரு பாலாரும்—தொண்டாற்றலாம்
பரோபகாரமே! பாரில் சிறந்த தாமே
பரவசமுடன் பலரும் ஊக்கம் கொள்வோம்! (சிறு)

6. தேசீய மணம் நிறைந்த திட்டங்கள்
நேர்மையாய் சீர் பெறவே நேசமாயுழைத்து
அங்கும் இங்கும் எங்கும் பங்கமில்லாமல்
துலங்கும் ஈசனைத் தினம் துதித்திடுவோம்! (சிறு)

இருண்ட இதயம்

[கோஹினூர்]

[இருண்ட இதயத்தில் வெளியாகும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே. ஒருவரையும் குறிப்பிடுவன அல்ல!]

(கொத்து 37, மலர் 2, பக்கம் 44-ன் தொடர்ச்சி.)

யாரோ என்மேல் கையை வைத்துக்கொண்டிருந்ததை உணர்ந்து திடுக்கிட்டு எழுந்தேன். ஜோதி கண்ணீர் வழிய என் மேல் தன் கரங்களை வைத்துக்கொண்டிருந்தாள். ஹென்றியும் சுடர்மணியும் சிரித்துக் கொண்டிருந்தார்கள். சுடர்மணி "அப்பா" என்றாள். ஹென்றி "மாமா" என்றான். "மூவருமே இறந்துவிட்டார்களா?" என திகைத்து விழித்தேன். ஜோதி "ஸாம்! ஏன் இன்னும் இந்த வைராக்கியம்?" என்றாள். நான் "விஷம்...... நீங்களுமா சாப்பிட்டீர்கள்?..." என்றேன். ஹென்றி அதற்குள்ளாக "கல கல" என நகைத்து "மாமா! நீங்கள் டாக்டரிடம் முதல் தடவை விஷம் வீட்டில் எலிகளுக்காக என்று கேட்கும் போதே அவர் உங்கள் ஜீவியத்தை அறிந்து சந்தேகப்பட்டு அத்தையிடம் ஏன் விஷம் என்று கேட்டிருக்கிறார். உங்கள் மனோ நிலையை அறிந்த அத்தை விஷத்திற்கு பதில் மயக்க மருந்தை கொடுக்கும்படி டாக்டரிடம் வேண்ட டாக்டரும் மயக்க மருந்தை கொடுத்திருக்கிறார்...(கண்ணீருடன்)...மாமா!... ஏன் இந்த பிடிவாதம்......உங்கள் தியாக வாழ்க்கை எங்கள் யாவருடைய இன்ப இதயத்தையும் இருண்ட இதயமாக்குகிறதே!......நீங்கள் மரிப்பதால் யாருக்கு என்ன பயன்? தயவு செய்து இந்த வீணான-பாபமான முயற்சிகளை விட்டு விடுங்கள்" என்றான். கண்ணீர் மடை திறந்தது போல் வடிய "அப்பா!......என் தாயின் பொருட்டு நீங்கள் செய்த எல்லா தியாகத்தையும்—உங்கள் துறவி தன்மையையும் அம்மா சொன்னார்கள். எங்கள் குலத்திற்கு பெருமை விளங்க நீங்கள் என் தாயையே மணந்து......" என்று சுடர்மணி கூறி முடிக்கு முன்பாக நான், "சுடர் ...போதும்? அதற்கு மேல் ஒன்றும் சொல்லவேண்டாம்......ஜோதியை இனி மணக்க எனக்கு விருப்பமில்லை......அவள் அவளது கடமையையே செய்யட்டும்......நீயும் ஹென்றியும் குலத்திற்கு பெருமை தரும்படியான ஒரு அழகுள்ள—குணமுள்ள—அறிவுள்ள குழந்தையை உலகினுக்கு அளியுங்கள். அதைப் பார்த்து என் இதயம்—வரண்ட இதயம்—இருண்ட இதயம் சற்றாகிலும் ஆறுதலடையும்" என்றேன்.

ஹென்றி "மாமா" என்றான். சுடர்மணி "அப்பா" என்றாள். ஜோதி "ஸாம்!" என்றாள். நான் "தெய்வமே" என்றேன். எங்கள்

எல்லாருடைய இதயமும் நொந்தது போல் ஆகிவிட்டது. சுடர்மணி ஹென்றிக்கு கண் ஜாடையாக ஏதோ காட்டினுள். ஹென்றி என்னைப் பார்த்தான்.

ஹென்றி :—மாமா !......உங்கள் இருண்ட இதயத்திற்கு இனி மின்னல் ஏற்படவே வழியில்லையா?

நான் :—ஏனில்லை? உன் மகனை—பிறக்கப்போகும் மகனைத்தான்! பார்க்கும்பொழுது இருண்ட இதயத்திற்கு மின்னல் ஏற்படும்! அத்தையைப் பார்க்கும்போது பேரிடி ஏற்படும், ஜோதியைப் பார்க்கும்போது கண்ணீர் மழை ஏற்படும். இது போதாதா இந்த துர் அதிர்ஷ்ட கட்டைக்கு?

ஜோதி :—ஸாம்!......உங்கள் மன ஆறுதலுக்காக என்னை பலி கொள்ள வேண்டுமானுலும் பலி கொள்ளுங்களேன்......(பெருமூச்சுடன்) ஸாம்! வெட்கத்தை விட்டு உங்களைக் கேட்கிறேன். என்னை இப்பொழுது மணந்து கொள்ளக் கூடாதா?.........நான் அபாக்கியவதியா? விவாகத்திற்கே லாயக்கற்ற அபாக்கியவதியா?......என் கரத்தை பிடித்து நீங்கள் "நீ என் மனைவி" என்று சொல்ல எனக்கு பாக்கியமில்லையா?... ஸாம்! வெட்கத்தை விட்டே கேட்கிறேன்......ஏன் இந்த மௌனம்? ஏனிந்த அழுகை?......மணம் செய்யாமல் நொந்த இதயத்தோடு நீங்கள் வாழ்கிறீர்கள். நானே மணம் செய்தும் நொந்த இதயத்தோடு இதயம் புண்ணுக வாழ்கிறேன். ஸாம்! நான் விரும்பும் உங்கள் க்ஷேம வாழ்வின் மீது ஆணை: உங்களை உயிரோடு மறுபடியும் காண்போம் என்னும் நம்பிக்கையின் பேரில்தான் கடந்த 19 வருடங்களாக வாழ்ந்து வந்தேன்...நீங்கள் ஒரு வேண்டுகோள் கேட்பதாக சொன்னீர்களே! அந்த வேண்டுகோளை நிறைவேற்றியாகிலும் உங்கள் உள்ளத் துடிப்பை அடக்கலாம் என யோசித்தேன்......அதற்காகவே வாழ்ந்தேன்! போதும் இந்த உலகம் போதும் இந்த வாழ்வு!...போதும் இந்த ஜீவன்......

நான் :—(கண்ணீர் வழிய) கண்மணி...அடடா! சீ ஜோதி! என்னிதய ராணி!......அன்றும் நீ ராணியாக இருந்தாய்...இன்றும் நீ ராணியாக இருக்கிறுய்......என்றும் என்னிதய அமர ராணி நீயே!......உன்னை வெறுக்கவில்லை. எப்பொழுதும்போல் நேசிக்கிறேன். துயருடன் இந்த அநித்ய ஆற்றைக் கடக்கப் பிரியமில்லை. காந்தா! என் சகோதரி என் மீதுள்ள பிரேமையால் சன்னியாசினியாகவே வாழ்ந்தாள்—சந்நியாசினியாகவே உயிர் துறந்தாள். அப்படி இருக்கையில் ஏன் நான் சன்னியாசியாக இறக்கக் கூடாது என மனம் துணிந்து விட்டேன். ஜோதி! என் வாழ்க்கைக்கு சக்தி அளிக்கும் ஜோதி! நீ பெண்ணல்ல என் வாழ்வின் சக்தி நீ!......நீ ஜோதியல்ல என் காதல் தெய்வம்!......என் முன் நிற்பது ஜோதியல்ல...அதோ! பரிசுத்தமான காதல் தெய்வம் தோன்றுகிறது... ஜோதி!......ஜோதி!! என்னை மன்னித்து விடு!!! என் மனத்தில் செய்துள்ள திட்டமான யோசனைகளை—வேண்டுகோளை நீயும், ஹென்றியும்,

சுடர்மணியும் நிறைவேற்றுங்கள், அது போதும். இனி நான் சாகமாட்டேன் உழைக்கப் போகிறேன். என் உடலையும்—உயிரையுமே ஆசிரிய சமூகத்திற்கு அர்ப்பணம் செய்யப் போகிறேன். அவ்வாறு செய்வதற்கு சக்தி தருவது நீதான் !...ஜோதி! ...ஜோதி !!!......என் காதல் தெய்வமே !!! நீதான் என்னை மறக்காதே ! அதே சமயம் நினைத்துக் கொண்டிருக்காதே ! வா ! நாமிருவரும் ஆசிரிய சமூகத்திற்கு தொண்டு செய்வோம் இனி உன்னை வித்தியாசமாக நினைக்கமாட்டேன். ஏனெனில் இனி நீ என் காதலி அல்ல !...காதல் தெய்வம் நீ !...உன் அன்பிற்கு வணங்குகிறேன்.......பாலிய பழக்கத்திற்கு பணிகிறேன். ஜோதி ! ஜோதி !! வா ! நாம் செல்வோம். அதோ அந்த அடி வானத்திற்கு அப்பாலாவது நம் இருண்ட இதயம் ஒளிபெறட்டும். அதுவரை நீ என் காதல் தெய்வம் ! புனிதவதி !! ஏற்றுக்கொள் என்னை !......இந்தா என்னை உனக்கு படைக்கிறேன்.

தடாலென்று ஜோதியின் பாதங்களில் விழுந்து அந்தபாதங்களை வாழ்க்கையிலேயே கடைசி தடவையாகவும் முதல் தடவையாகவும் முத்தமிட்டேன் !

வருடங்கள் 2 ஆகிவிட்டது. என் வீட்டிற்கு முன்பாக " ஆசிரியர் " காரியாலயம் என்னும் பலகை தொங்குகிறது. இப்பொழுது பார்க்கலாம் அதை ! " ஆசிரியர் " என்னும் வாரசஞ்சிகைக்கு நான் பத்திராதிபர் என் காதல் தெய்வமாக ஜோதி சித்திரம் வரைபவள். ஹென்றியும் சுடர்மணியும் " ஆசிரியர் " காரியாலயத்திலேயே வேலை செய்கின்றனர். எங்கள் செல்வத்தையெல்லாம் போட்டு அந்த பத்திரிகையை நடத்துகிறோம். அது ஆசிரியர்களுக்கு பிரயோஜனப்படக்கூடிய பத்திரிகை. எல்லா ஆசிரியர்களுடைய அபிப்பிராயங்களுக்கும் அதில் இடமளிக்கிறோம். ஜோதியை நான் களங்கமற்ற மனதோடு பார்ப்பேன். அவளும் அப்படியே பார்ப்பாள் ஆனால் ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் அழுது புலம்புகிறோம். அவள் புலம்புவதையும் பார்த்திருக்கிறேன் ஏனெனில் எங்களிதயம் இருண்டது !

ஒரு நாள் நான் " ஆசிரியர் " பத்திரிகைக்கு தலையங்கம் எழுதிக்கொண்டிருந்தேன். ஜோதி " எழுச்சியுற்ற ஆசிரியன் " என்னும் கட்டுரைக்குப் படம் போட்டுக்கொண்டிருந்தாள். எங்களருகில் ஒரு வயது பாலன் அவன்தான் ராஜமணி......சுடர்மணியின் மகன் நின்றுகொண்டிருந்தான். அவன் முகத்தைப் பார்த்ததும் என்னிருண்ட இதயத்தில் ஓர் மின்னல் தோன்றியது. அந்த மின்னல் தலையங்கம் எழுதுவதை தடைசெய்தது. ராஜமணியை வாரி எடுத்து முத்தமளித்தேன். அப்பொழுது என் உணர்ச்சியுள்ள கண்கள் கண்ணீரை கக்கியது. அதைப் பார்த்து சகிக்காத ஜோதி " ஸாம் உன் காதல் தெய்வம் இடும் கட்டளை இது இனி உன் கண்களிலிருந்து நீரே வரக்கூடாது " என்றாள். அது

முதல் கண்ணீரே விடுவதில்லை. ஆனால் இருண்ட இதயம் இருண்ட இதயம் தானே! அதற்கு எது விமோசனம்?

மற்றொரு நாள் மெத்தையிலிருந்து தோட்டத்தின் இயற்கை அழகுகளை கவனித்துகொண்டிருந்தேன். அந்த சமயம் திடீரென சுடர்மணி தோட்டத்திற்கு ஓடிவந்தான். சுடர்மணியின் பின்னாலேயே ஹென்றியும் ஓடிவந்தான். சுடர்மணியை பிடித்து மெல்ல இரு குட்டுகள் குட்டினான் தலையில்! மெத்தையிலிருந்து ராஜமணிக்கு அதைக் காட்டினேன். அவன் "அம்மா" என அழுதான். "அழாதேடா கண்ணு" என்று கூறி ஆழ்ந்த அன்புடன் அவனை முத்தமிட்டேன் அப்பொழுதும் மின்னியது என்னிருண்ட இதயம்! பெரு மூச்சுடன் யாரோ வரும் சப்தம் கேட்டு திரும்பினேன். ஜோதி "ஸாம்! அம்மா இறந்து இன்றுடன் சரியாக ஒரு வருஷம் ஆகிறது" என்றாள். அத்தையை நினைக்கையில் இதயம் இருள்கிறது! ஜோதியை நினைக்கையில் பேரிடி தோன்றுகிறது! ராஜமணியை நினைக்கையில் மின்னுகிறது! என் வாழ்க்கையை நினைக்கையில் மழை பொழிகிறது. எது? என்னிருண்ட இதயம்தான்!

(முற்றிற்று)

சிறு கதை

[C. Abraham]

கள்ளனுக்கேற்ற குள்ளன்

ஊரில் திருடனைப் பற்றிய புகார் அதிகரித்துக் கொண்டு வந்தது. இந்த வீட்டில் திருடன் புகுந்தான், கோடி வீட்டில் கொள்ளை போனது என்ற புகார்கள் பெருகிக்கொண்டு வந்தன. திருடனின் தீச்செயலை பொறுக்காது போலீஸில் புகார் செய்தார்கள். போலீஸாரும் அத் திருடனைப் பிடிக்க வேண்டிய முயற்சியைச் செய்து வந்தார்கள். ஆனால் அக் கள்ளன் பிடிபடாமையால் போலீஸார் கீழ்க்கண்ட விளம்பரத்தை வெளியிட்டார்கள்.

இதனால் சகல குடிகளும் அறிவது: "ஊரில் திருடனின் தீச்செயல் அதிகரித்திருப்பதால் அவனைப் பிடித்துக் கொடுப்போருக்கு ரூபாய் 50 பரிசளிக்கப்படும்" என்று விளம்பரம் செய்யவே, ஊரிலுள்ள யாவரும் அதைக் கேட்டு எப்படியாவது அத் திருடனைப் பிடித்துக் கொடுத்து ரூபாய் 50-ஐ அடைய வேண்டுமென்று, ஒவ்வொருவரும் சமர்த்துக் கூறிக்கொண்டார்கள். விளம்பரத்தைக் கேட்ட அவ்வூர் குள்ளன் அத் திருடனைப் பிடிக்க

வேண்டிய வழிகளைத் தேடிக்கொண்டு வந்தான். பேருக்கேற்றபடி அவனும் குள்ளமாகவே இருந்தான். குள்ளனுக்கு ஒரு யோசனை பிறந்தது. அதன்படி அவ்வூர் நாட்டாண்மைக்காரனிடம் ஒரு ஜாதி பஞ்சாயத்து கூட்டும்படி செய்தான். நாட்டாண்மைக்காரனும் அதற்கிசைந்து பஞ்சாயத்தைக் கூட்டினான். அப் பஞ்சாயத்தில் பக்காத் திருடனும் பிரசன்னமாயிருந்தான். அவனுக்கேற்ற குள்ளனும் கூட்டத்தின் பின்னால் ஒரு பக்கமாக அமர்ந்திருந்தான், கூட்டமும் தொடங்கிற்று.

நாட்.: "பெரியோர்களே! நமது ஊரில் திருட்டு நடப்பது யாவரும் அறிந்த விஷயமே, ஆனால் திருட்டுப்போன வீடுகளில் அத்திருடனைப் பார்த்திருந்தால் அவனைப் பற்றிய சில அங்க அடையாளங்களைத் தெரிந்த வரையிலும் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன் என்றார்."

மூத்து :—"ஐயா! என் வீட்டில் களவு போன அதே சமயத்தில் சத்தங்கேட்டு திடீரென வெளியே பார்க்க, முழங்கால் வரையிலும் ஆடை உடுத்திய ஒரு மனிதன் ஓடுவதைக் கண்டேன்," என்றான்.

சுப்பு :—நாட்டாண்மைக்காரரே! "என் வீட்டில் திருட்டுப்போனது உண்மை. அன்று என் மனைவி தலையில் துணியைக் கட்டின ஒருவன் சுவற்றை ஏறி குதித்து ஓடுவதைக் கண்டாளாம்," என்றான்.

இப்படியாக கருப்பாயிருந்தான் என்பவர்களும், உயர்ந்து வளர்ந்திருந்தான் என்பவர்கள், மற்றவர்கள் இம்மாதிரி அடையாளங்களைச் சொல்லி வரும் சமயத்தில் அக் கூட்டத்திலுள்ள திருடன் பேசாமலிருந்தான். குள்ளனோ யோசனையில் ஆழ்ந்திருந்து திடீரென "ஆமாம் அவனுக்குத் தலையின் உச்சியில் நான்கு முடிகூட இருந்ததா?'' என்று கேட்கும்போது மற்றவர்கள் பேசாமலிருக்க, திருடன் தன் தலையைத் தடவிப் பார்த்தான். இதைக் கண்ணுற்ற குள்ளன் உடனே அவனுடைய கையை இருகப் பிடித்துக்கொண்டு, நான் கேட்ட கேள்விக்கு மற்றவர்கள் சும்மா இருக்க இவன் மட்டும் தன் தலையைத் தடவிப் பார்ப்பதின் காரணம் தனக்கே சந்தேகமேற்பட்டுத்தான் இவ்விதம் செய்தான். ஆகையால் இவன்தான் திருடன் என்று நிச்சயித்து கூறினான்.

அவர்களும் அவனைப் போலீஸாரிடம் ஒப்படைக்க அவர்கள் அவனைச் செய்த பல இம்சைகளில் தான் திருடன் என்பதை ஒப்புக்கொண்டான். போலீஸார் விளம்பரத்தின்படி ரூபாய் 50-தைக் குள்ளனுக்குக் கொடுத்து திருடனைச் சிறைசெய்தார்கள். அவ்வூர்வாசிகளும் திருடனின் தொந்தரை நீங்கி சுகமுடனிருந்தார்கள்.

"புத்திமான் பலவானுவான்"

அ0005
600 008

விடுகதைகள்

இது என்ன?

1. தண்ணீரில் ஓடி வரும் தத்துவப் பசு
தரை மீது போகாத வித்துவப்பசு இது என்ன?

2. காலையில் கோட்டை கட்டி கடும் பகலில் யுத்தம் செய்து
மாலையில் விரித்துப் போடும் மன்றவீரன் யார்?

3. பரிந்து நம்மை ஈன்றெடுத்துப்
பால் கொடுத்து அன்னையினும்
பதினாயிரம் மடங்கு பட்சமுள்ள பெரியன்னை—இவள் யார்?

4. முள்ளு முனைக்குள்ளே, முந்திரித் தோப்புக்குள்ளே
வைக்கோல் போருக்குள்ளே கண்டெடுத்தேன் வயிரக்கல்
இது என்ன?

5. திண்டுக்கல்லை இரண்டாக வெட்டி
திருச்சினாப்பள்ளியை மூன்றாக மடித்து
வெள்ளைக்காரனை உள்ளே விட்டு
விசையை முடிக்கிவிட்டால், “ரத்தம், ரத்தமாய்” வடியும்.

P. Susaimuthu, R. C. Boarding House.

6. எட்டுக் கால் ஓடே, இருகால் தலை மூன்று.
நட்டமுள்ள கொம்பிரண்டு, வாய் நான்கு
திட்டமுடன், கண்ணாறு, காதாறு கண்டு
சொன்ன பேர்களுக்கு பெண்ணாகியானிருப்பேன்.

7. சண்டியதுபோல் கிடக்கும் எழுந்திருந்து.
சருது புல்லை கண்டவுடன் தாவி மேயும்
அண்டினால் தன் கடிக்கும் அருகே சேரும்
அபிஷேகம் செய்து வைத்தால் அடங்கி நிற்கும்.

D. Abraham, Teacher, Kilamichaelpatti.

600 008

[குறிப்பு: விடுகதைகள் அனுப்புவோர் விடைகளையும் சேர்த்து அனுப்பவேண்டும். இல்லையேல் “பூங்கொத்தில்” பிரசுரிக்கப்படமாட்டாது. ப-ர்.]

Reg. No. M. 1534.

சங்கீதம்

(By B. Thomas Victor, Music Teacher.)

பாரதியார் பாடல்

29 இராகம்: பியாக் — ஆதிதாளம்

; ஸா ; கம பா ; பாதா | பதஸ்ாஸ்நிநித |
. செந் . தமிழ் நா . டென்னும் | போ . . தி . னி . |

பததபமககா ||
லே . . இன்ப ||

; கபாமகா மககரிரீஸா | ; ஸா ; கம
. தேன்வந்து பா . . . யுது | . கா . தினி

2
பா , மபசுபா ||
லே . எங்கள் ||

3 3 3 3
; நீ ; தப நீ ; நீநீ | ; ஸா ; ஸ்ஸ் | நிஸ்ரிக்ரீஸ்ா ||
. தந் . தையர் நாடென்ற | . பேச் . சினி | லே . . . ஒரு ||

2 2 2 2
; பஸாநிரிஸ ஸநிநிததாபா | கமபஸஸநிநித
. சக் . திபி . ற . . . க்குது | மூ . . ச்சி . நி .

பததபமாகா ||
லே . . . . . ||

(மற்ற சரணங்களை இதேமாதிரி பாடவும்)

2. வேதம் நிறைந்த தமிழ் நாடு—உயர்
வீரம் செறிந்த தமிழ் நாடு—நல்ல
காதல்புரியும் அறம்பையர் போலிளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ் நாடு.

3. காவிரிதென் பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வைகை பொருணைநதி—என
மேவிய ஆறுபல வோட
திருமே னிசெழித்த தமிழ்நாடு.

4. வள்ளுவன்தன்னை உலகினுக்கேதந்து
வான்புகழ்கொண்ட தமிழ்நாடு—நல்ல
பலவிதமாயின சாஸ்திரத்தின்மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு.

Editor and Publisher : Rev. Fr. A. Lourduswami, B. A., L. T., Headmaster, R. C. Secondary Training and High School.

Printed by Rev. Fr. A. Susai Regis
Supt.. St. Joseph's Industrial School Press, Trichinopoly.
Q. H. No. Ty.—1, 12—9—1946.